# <u>மன்ற பொருள்</u>

இந்நகராட்சியில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளும் வார்டுகளின் நகர்மன்ற உறுப்பினர்கள் 17 பேர் தஙகளது வார்டுகளில் துப்புரவு பணி மிக மிக மோசமாக உள்ளதாகவும், தற்போது சுமார் பத்து நாட்களாக தொடர்ந்து நடைபெறாமல் இருந்து வருவதாகவும், பல முறை நகர்மன்றத்திலும், ஆணையாளரிடமும் முறையிட்டும் தனியார் துப்புரவு பணி செய்யும் ஒப்பந்தகாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பல மாதஙகளாக துப்புரவு பணி மோசமாக உள்ளதால் பொதுமக்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருக்கிறது எனவும், நகரில் சுகாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு தக்க நடவடிக்கை எடுத்து நிரந்தர தீர்வு காண நகர்மன்ற தலைவரை எழுத்து மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவர் அவர்கள் மேற்படி பொருளின் அவசரம் கருதி 11.06.2010 அன்று மாலை 4.30 மணிக்கு அவசர கூட்டம் கூட்ட நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த காலத்தில் 12.07.2007 – ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலை விகிதத்தினை விட 44.28 % குறைவாக கொடுத்த திரு.ஏ.ஜெரால்டு மெஜிலா ஒப்பந்தக்காரருக்கு 31.07.2007 – ம் தேதிய நகர்மன்றதீர்மான எண்.767 – ல் வழஙகப்பட்ட அனுமதியின் பேரில் 01.08.2007 முதல் 31.07.2010 வரை மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டிருந்த 23 பணி நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள 31 நிபந்தனைகளுடன் கூடுதலாக மற்றும் நிபந்தனைகள் சேர்த்து ரூ.20/– மதிப்புள்ள ஒப்பந்தப்பத்திரத்தில் ஒப்பந்தம் பெற்று பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்ததாரர் 10/2007 மாதத்தில் தெருக்கள் பெருக்கி சுத்தம் செய்யப்படாதது ஆணையாளர் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டு 9/2007 மாதப்பட்டியலில் அதற்கான அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது. மேற்படி நாள் முதல் தொடஙகி நாளது வரை மேற்படி ஒப்பந்தக்காரர் தொடர்ந்து பணியில் மெத்தனப் போக்கினை கடைப்பிடித்து வருவதால் அவ்வப்போது எச்சரிக்கை அறிவிப்புகள் அனுப்பப்படுவதும் அபராதம் விதிப்பதுமாகவே மேற்படி பணியினை நாளது வரை மிகுந்த சிரமத்திற்குள் நகரமக்களின் பொது சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு, தொற்று நோய்கள் நகரில் பரவாது தடுக்கும் விதமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தக்காரரின் செயல்பாடுகள் மிகவும் மோசமாகி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றறு தினசரி நாளிதழ்கள் முறையாக திடக்கழிவுகள் அகற்றப்படாத காரணத்தால் சுகாதார கேடும், சாக்கடையை சுத்தம் செய்யாததால் கழிவு நீர் தேஙகி துர் நாற்றம் வீசுவதோடு,

தெருக்களில் வழிந்தோடும் நிலையும், கொசுக்களின் பெருக்கம் காரணமாக பலவிதமான நோய்களும் பரவும் சூழ்நிலை எற்பட்டதனை தொடர்ந்து பொதுசுகாதார நலனை கருதி அனைத்து நிலைகளிலும் நகராட்சிக்கு ஏற்பட்ட அவப்பெயரினைகளையும் விதத்தில் தகுந்த மேல் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசரம் என கருதி மேற்படி ஒப்பந்தக்காரருக்கு வழஙகிய பணி ஆணையினை ரத்து செய்து குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி கோரப்பெற்றதில் மன்றம் தனது 25.01.2010 – ம் தியதிய தீர்மானம் எண்.790 – ல் 31.07.2010 வரை துப்புரவு பணி செய்ய புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதுவரை பழைய ஒப்பந்தக்காரர் தொடரவும் தீர்மானித்ததன் பேரில் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் 18.03.2010 – ல் கோரப்பெற்றதில் மதிப்பீடு விலை விகிதத்தினைவிட 30.59 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதன் பேரில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி ஏற்க இயலாத நிலையில் மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர முயற்சி எடுக்கப்பட்ட நிலையில் மேற்படி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தக்கால் 31.07.2010 –ல் முடிவடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும் 18.06.2010 –ல் ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தக்காரர் தொடர்ந்து பல நாட்களாக நகரில் உள்ள குப்பைகளை அகற்றாது இருப்பதால் குப்பைகள் பெருமளவில் தேஙகி நகரில் மிகுந்த சுகாதாரகேடு எற்பட்டதனை பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், தினசரி நாளிதழ்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் போராட்டஙகள் மூலம் மீண்டும் மீண்டும் விமர்சனத்திற்குள்ளானதை தொடர்ந்து , மேற்படி குறைபாடுகளுக்கு உடனடி தீர்வு எற்படும் பொருட்டு நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு 30.05.2010 அன்று ஒரு நாள் மட்டும் 22.490 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றப்பட்டுள்ளது. மேலும் தற்போது மேற்படி நிலை தொடர்வதால் வரும் நாட்களிலும் மேற்படி பணி போல் ஒர் சிறப்பு பணிக்கான நடைமுறைகள் துவக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பலநாட்களாக குப்பைகள் அகற்றப்படாத நிலையில் மேற்படி குப்பைகள் பணியாளர்களை கொண்டு அகற்ற இயலாத நிலையில் மேற்படி ஒப்ந்தக்காரர் JCB இயந்திரம் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டதில் அதன் அருகில் உள்ள compound சுவர் இடிந்து விழுந்ததும் புகைபடத்துடன் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அரசு விழாக்களில் நகர பகுதிகளில் கலந்து கொள்ள வருகை தரும் பகுதிகளை பார்வையிட்டு அதிருப்தி தெரிவித்துள்ளதுடன், தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கவும் ஆணையரை நேரில் அழைத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தென்மேற்கு பருவ மழை தொடஙக உள்ள இச்சூழ்நிலையில் மேற்படி நிலை தொடருமானால் நகரில் சுகாதார கேடு ஏற்பட்டு பொதுமக்கள் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும். எனவே உடனடியாக மேற்படி ஒப்பந்தக்காரருக்கு வழஙகப்பட்ட

உரிமத்தினை ரத்து செய்து தீவிர நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி ஒப்பந்தக்காரருக்கு வழஙகப்பட்ட உரிமத்தினை உடனடியாக ரத்து செய்யவும் அன்னார் பெயரினை கறுப்புப்பட்டியலில் சேர்த்து ஒப்பந்தக்காரர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யவும் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக எடுக்கப்பட வேண்டியது தொடர்பாக மேற்படி வார்டுகளில் பணியாற்றும் சுகாதார ஆய்வர்களின் கருத்துகள் கேட்கப்பட்டதில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கலாம் எனவும் சுகாதார ஆய்வர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பணி மேற்கொள்ளும் இதர 26 வார்டுகளில் பணிபுரியும் பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளலாம்.
2. சென்ற ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ( 12.07.2010 ) உள்ள L 2 – ற்கு பணி ஆணை வழஙகி பணியினை மேற்கொள்ளலாம். L 2 – மூலம் பணி மேற்கொள்ளும்போது நகராட்சி வாகனஙகள் கட்டணம் நிர்ணயம் செய்து வழஙகி அதன் மூலம் பணியினை மேற்கொள்ளலாம்.
3. Labour Contract மூலம் தனியாரிடம் தொழிலாளர் மட்டும் பெற்று அதன் மூலம் பணியினை மேற்கொள்ளலாம்.
4. மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள சம்பளத்தின் அடிப்படையில் பணியாளர்களைஅமர்த்தி பணி மேற்கொள்ளலாம்.

எனவே நகர பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக மன்றம் முடிவு செய்யலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.9398/2006/எச்.1

**தீர்மான எண் : 138 – தனியார் துப்புரவு பணி செய்யும் ஒப்பந்ததாரர் திரு.ஜெரால்டு மெஜிலாவின் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுகிறது. இப்போதிலிருந்து நாகர்கோவில் நகராட்சி மூலம் 51 வாாடுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ளவும் இதற்கு போதிய பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சி தலைவர் நிர்ணயித்துள்ள சம்பளத்தின் அடிப்படையில் பணியாட்களை அமர்த்தி பணியை மேற்கொள்ளவும், இதற்கு தேவையான லாரி, டெம்போ, ஆட்டோ, J.C.B, பொக்லின் போன்றவற்றை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும், தேவைப்படும் தளவாட சமான்களை வாஙகிக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.**